சரம கவிகள்

– க. இராஜையா

929.2
இராஜை

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமான் சின்னத்தம்பி இராசேந்திரம்

அவர்கள்

சிவபதமடைந்தபோது கூறிய

# சரம கவிகள்.

வட்டுக்கோட்டை
பண்டிதர் க. இராசையா அவர்களால்
பாடப்பெற்றது.


## IN MEMORIAM

## SINNATHAMBY RAJANDRAM

Managing Director of
Messrs. Rajandrams Ltd., Messrs. Sterling Products Ltd.,
Messrs. Maharajah Distributors Ltd., and Messrs. Mahadavans Ltd.

1965.

929.2
இராசை



தோற்றம்: 30-11-1903.
மறைவு: 12 - 9-1965.

929.2
இராசை

EVELYN RUTNAM LIBRARY
JAFFNA
317

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீமான் சின்னத்தம்பி இராசேந்திரம்

அவர்கள்

## சிவபதமடைந்தபோது கூறிய

# சரம கவிகள்.

### நேரிசை வெண்பா.

செப்புவிசு வாவசுவாஞ் சேரா வணிநாலேழ்
ஒப்பில் துவிதியையா முயரபரம்—செப்பரிய
அண்ணல் இராசேந்திரம் அவனிதனை விட்டகன்று
நண்ணினன் ஈசனடி நயந்து.

### நேரிசையாசிரியப்பா.

முத்தினந் தவழும் முந்நீர் சூழ்ந்த
இரத்தினந் திகழும் ஈழநன் னாட்டின்
சிரமென மிளிரும் சீரியாழ்ப் பாண
மாநகர்க் கணித்தாய் மாண்புட னென்றும்
கன்னல் செந்நெல் கதலிமா வருக்கை
எழில்பெறு தெங்கு எலுமிச்சை தோடை
வன்ன மாதுளை வாகிளம் பூகம்
மன்னு தேவாலயம் மகிழ்வித்தி யாலயம்
பன்னும் வைத்திய சாலைகள் முதலாம்
இன்னன யாவும் இயைந்திடப் பெற்றே
கலைமகள் அலைமகள் களிநடம் புரியக்
கற்றவர் திகழும் கவின்மிகு வளந்திகழ்

கோதிலாப் புகழுடைக் கொக்குவில் தன்னில்
உயர்குடிப் பிறப்பும் உத்தம வாழ்க்கையும்
பொருந்து மாப்பாண முதலியார் மைந்தனுய்த்
தரணியில் வாழ்ந்தோன் தகைமைகள் மிக்கோன்
சண்முகம் என்னுஞ் சாற்றரும் மைந்தன்
அன்னவன் தனக்கு மன்னிய புதல்வனுய்ப்
புகழுட னுதித்த பொற்புடைக் குரிசில்
சின்னத் தம்பியாம் செப்பருங் குணத்தோன்
கற்றவர் போற்றக் கலைபல பயின்றோன்
மலாயா சென்று மன்னிய அரசினர்
சேவையில் அமர்ந்து சிறந்திட நாளும்
எவரும் போற்ற இலங்கிய வேளையில்
அவ்வூர் தன்னில் செவ்விதாய் வாழ்ந்தோன்
தன்மர புதித்தோன் தகைமைகள் நிறைந்தோன்
அறிவோ டாற்றல் அமைந்திடப் பெற்றோன்
செல்வனும் சின்னத் தம்பி உடையார்
சேயெனத் தரணியிற் சிறப்புடன் திகழ்ந்த
மூத்த தம்பியின் முதன்மைசால் புதல்வன்
வீரவாகு வெனும் சீர்திகழ் அண்ணல்
அவனியிற் பயந்த அருமைசேர் புதல்வி
எழில்மிக வுடையாள் இராசம் மாவைத்
திருமணம் புரிந்து அருமையாய் நிதமும்
இறைவனைப் போற்றி இருந்தநற் செல்வன்
அன்னவ ரிருவரும் பன்னருஞ் சிறப்புடன்
இல்லறந் தன்னை எழிலுடன் ஆற்றி
இன்பமாய் நிதமும் இருந்திடு காலை
மங்கல மனைக்கு நன்கலன் எனவே
பவப்பிறப் பறுக்கும் பராபர னருளால்
எழில்மிகு செல்வனும் இராசேந்திரம் தான்
அனைவரும் மகிழ அவனியில் உதித்தனன்
விளையும் பயிரை முளையில் தெரியும்
என்றுமே ஆன்றோர் இயம்பிய வாறு

அன்பு அடக்கம் ஆற்றல் அறிவு
இன்சொல் ஈகை இரக்கம் சாந்தம்
அருள்பொறை ஞானம் ஆன்றநல் லொழுக்கம்
ஆதிய பண்பெலாம் அமைந்து விளங்க
யாழ்நகர் தன்னில் இலங்கிடும் இந்துக்
கல்லூரி யதனிற் கலைதனைக் கற்றும்
வர்த்தகக் கலையில் மெத்தவும் நாட்டமாய்
அக்கலை தன்னை ஆர்வமாய்ப் பயின்றும்
வர்த்தகந் தன்னை வளம்பெற ஆற்றியும்
எவரும் மதிக்க இருந்திடும் போது
அவ்வூர் தன்னிற் செவ்விதின் வாழ்ந்தோன்
மரபினி லுயர்ந்தோன் மகிமைகள் வாய்ந்தோன்
மலாய்நா டதனில் மன்னு முத்தியோகமாய்
சிறப்புடன் திகழ்ந்த சிற்றம் பலந்தான்
பூவினில் புரிந்த புண்ணியப் பயனால்
இத்தரை யுதித்த எழில்மிகு செல்வி
பொற்பும் கற்பும் பொருந்திய பூங்கொடி
செல்லம்மா வெனும் மெல்லியல் தன்னை
உறவினர் நண்பர் உவகை மீதூர
அங்கி சான்றாய் ஆகம விதிப்படி
மணமது புரிந்து மாண்புட னொழுகி
இல்லற மாகிய நல்லற மதனை
அன்பொடு பேணி ஆவன புரிந்து
இறைவனைப் போற்றி இருந்திடு நாளில்
குலந்தனை விளக்கும் குலவிளக் கெனவே
இராச லக்குமியொடு மகாலக் குமியும்
ஜெய லக்குமியுடன் விஜயலக் குமியும்
மகா ராசாவெனும் மைந்த னொடு
இராச மகேந்திர மென்னுந் தனயனும்
புத்திர ராகப் புகழுடன் திகழ
மெத்தவும் மகிமையாய் மேதினி வாழ்ந்தோன்
உயர்குடிப் பிறப்பு ஒளிதிகழ் வாழ்க்கை

அருள்பொறை ஞானம் அறிவோ டாற்றல்
இன்சொல் இரக்கம் ஈசுர பக்தி
உயருத் தியோகம் ஒழுக்க மாசாரம்
ஆதிய இவையெலாம் அமைந்து விளங்கப்
புவியினிற் றிகழும் புகழ்மிகு மறிஞராம்
ஸ்ரீராம நாதன் எனும்வழக் கறிஞரும்
சற்குரு நாதனும் டாக்ரர் தன்னொடு
சத்தியேந் திராவெனும் நியாய வாதியும்
பிரபல டாக்ரராய்ப் பெருமையோ டிலங்கும்
குணமுடைக் குரிசில் குமார சாமியும்
இணையிலி பத்மா எனும் பேராட்டியும
மருகர்க ளெனவே மகிமையோ டிலங்கப்
புவியினில் நிதமும் புகழுடன் வாழ்ந்தோன்
உடன்பிறப் பாளராய் உலகினில் உதித்த
இசைதிகழ் டாக்ரராம் ராசா தன்னுடன்
அரசினர் சேவையில் அமர்ந்துமே விளங்கும்
மநியா பரணமாம் மகிபனும் நியாய
துரந்தர ராகிய கந்தையா வெனும்
அரன்கனை மணந்த மாது ரத்தினமும்
மாந்தருள் சமூக ஜோதியாய் அமைந்த
எந்தலாந் தியாக ராசனை அணைந்த
எந்திழை யாளாம இந்திராணியும்
குணம் ஜெலுமையா எனப் புகழ்பெற்று
வணங்கிட நின்ற டக்ரரைக் கணவனாய்
இனம்பெற நின்ற ஈஸ்வரி தேவியும்
துணைவரா யிலங்கத் தரணியில் மிளிர்ந்தோன்
ஊரில் ஒருவன் நண்பனு மெனவே
உரைத்திடு மான்றோர் முதுமொழிக் கிணங்க
மகா தேவனெனும் மகிபன் தனையே
நண்ப னாய்க்கொண்டு நலமுடன் வாழ்ந்தோன்
இத்தகைச் சிறப்பெலாம் எய்திடப் பெற்றே
இருந்தநற் செல்வன் இராசேந் திரந்தான்

நீதியும் வாய்மையும் நிறைந்த குணத்தோன்
உற்றோர்க் குதவி உவகையாய்ப் புரிவோன்
எவர்க்குந் தீங்கு எண்ணு உளத்தினன்
கடவு ளடியிணை கனவிலும் மறவான்
ஆலய சேவை ஆற்றிடுஞ் சீரோன்
உத்தம குணத்தினன் பக்திமிக் குடையோன்
நன்னெறி நின்றோன் நன்னடை மிக்கோன்
தேசப் பணியைச் செவ்விதிற் புரிந்தோன்
கைம்மா றின்றிக் கடமைகள் புரிவோன்
மன்னுயிர் தன்னுள் மாமணி யனையான்
பயன்மர முள்ளூர்ப் பழுத்தன போன்றோன்
சீலமும் பண்பும் சிறந்திடு மேந்தல்
சைவா சாரத் தனிப்பெரும் பண்புடன்
மானிலம் மதிக்க மகிமையாய் இருந்தோன்
செவ்விதிற் கடமை செய்திடுஞ் சீரோன்
அறம்பல வாற்றிய அரும்பெருங் குரிசில்
சீர்பல மிகவே செவ்விதின் வாழ்ந்த
இன்னருங் குணமுடை இராசேந் திரந்தான்
ஆன்றோர் உரைத்த அறநெறி வழியே
மனையறந் தன்னை மாண்புடன் பேணியும்
உறவினர் தம்மை உவகையாய்ப் போற்றியும்
வருவிருந் தினரை எதிர்கொண் டழைத்தும்
ஏழைகள் தமக்கு இயன்றன புரிந்தும்
இறைவன் திருவடி என்றுமே மறவா
திருந்துநற் பணிகள் புரிந்திடு காலை
எவருங் கருதா திருந்திடு வேளையில்
அருட்பெருங் கடலாம் அரன்திரு வருளால்
வினைப்பய னகல நினைப்பெலா மொழிய
உலகினை வெறுத்து உடலினை விடுத்து
மனைவி மக்கள் மாண்டு புலம்ப
மருகர் மருகியர் மயங்கித் திகைக்கச்
சோதரர் நண்பர் சோர்ந்து அரற்ற

EVELYN RUTNAM LIBRARY
JAFFNA
317

உறவின ரானோர் உருகிப் பதைக்க
அன்பர்கள் தாமும் அயர்ந்து வருந்தப்
பேரர்கள் கலங்கிப் பிரியா தழவே
ஈசன் திருவடி இதயத் திருத்திக்
குளிர்ந்த முகமும் கூப்பிய கரமுமாய்
ஆண்டு அறுபத் திரண்டு நிகழ
மன்னிய விசுவா வசுமதி யாவணி
நண்ணிய நாலேழ் நாள்கதிர் வாரம்
பொருந்திய அபரம் புகல்துவி தியையில்
உத்தராட் டாதி உற்றிடு வேளையில்
மாலை நேரம் மணியே ழரையில்
ஈசன் இணையடி இனிதென
நேசமாய் விண்ணுல கடைந்தனன் விழைந்தே.

## மனைவி புலம்பல்.

### விருத்தம்.

அக்கினி சாட்சியாக அன்றெனைக் கைப்பிடித்துத்
தக்கநற் சபையோர்முன்னே தரணியிற் பிரியேனென்று
மிக்கவே மொழிந்தாய்நீயும் மின்னென மறைந்தாயின்று
எக்கால மினியான் காண்பேன்என் துயரியம்பொணாதே.

## மக்கள் பிரலாபம்.

### வெண்பா.

தந்தையே எங்கள் தயவே அருள்நிறைந்த
எந்தையே எங்கே மறைந்தாய்—சந்ததமும்
இன்சொல் மிளிருமுந்தன் இனியமுகம் காண்பதென்றோ
என் சொல்வாய் இப்போ தெமக்கு.

### விருத்தம்.

வரமது வேண்டிப்பெற்றே வளர்த்தனை வையமீது
அருமையாம் பொருள்கள்யாவும் அளித்தெமைப் போற்றிவந்-
திருத்தமாங் கல்வியூட்டித் திகழவும் வைத்தாய் ஐயா [தாய்
பரனடி சேர்ந்தாய்யாமும் படுந்துயர் பகரொணாதே.

மக்களென்றழைத்து நாளும் மகிமையா யெமையேபேணி
தக்கநல்லறிவு செல்வம் தந்தெமை நாளுங்காத்தாய்
இக்காலமும்மைப் போன்றோர் தந்தையை யெங்குக்காண்போம்
தக்கநற் குணத்தாயுந்தன் தனயர்நாம் தவிக்கின்றோமே.

## மருமக்கள் புலம்பல்.

### விருத்தம்.

அன்புசால் தந்தைபோன்றே யம்புவி தன்னில்நாளும்
இன்பமார் உரைகள்கூறி யென்றுமே பேணிவந்தாய்
மன்பதை தனக்குளோர் நன்மணியெனத் திகழ்ந்தாய்நீயும்
இன்றெமைப் பிரிந்தாய்நீதான் எம்துயரியம் பொணாதே.

பெற்றவுன் மகவுபோலப் பிரியமோ டெமக்கெஞ்ஞான்றும்
உற்றநல் லுதவிசெய்தே யுண்மையாய்ப் போற்றிவந்தாய்
நற்றவப் பயனேயென்ன நானிலம் போற்றவாழ்ந்தாய்
கற்பகதருவே யுன்னைக் கண்டுளம் மகிழ்வதென்றோ.

## சகோதரர் பிரலாபம்.

### வெண்பா.

பொன்னைப் பெறலாம் புகழ்பெறலாம் புவியதனில்
இன்னு முளவெல்லாம் எய்திடலாம்—பன்னரிய
உத்தமனே உடன்பிறப்பே உன்னையினிக் காண்பதற்கு
எத்தவந்தான் ஆற்றுவமோ இனி.

### விருத்தம்.

மக்கள் மனைமருகர் மாண்புமிகு சுற்றமெலாம்
மிக்கபொருளுட னிம்மேதினியில் வாழ்ந்தாலும்
தக்கவுடன் பிறப்பே தரணிதனி லுன்போலப்
பக்கத் துணையையினிப் பாவியர்யாம் காண்பதென்றோ.

## பேரப்பிள்ளைகள் புலம்பல்.

### விருத்தம்.

எப்போது மெம்மைநிதம் இன்பமுடனே யழைத்துத்
தப்பாமல் நல்லுணவு தந்து வளர்த்துவந்தாய்
இப்போ தெமைவிட்டு எங்குசென்றுய் யப்பாநீ
எப்போ துனைக்காண்போம் எங்கள்துயர் தாங்கரிதே.

## உறவினர் புலம்பல்.

### விருத்தம்.

அன்புடன் முகமலர்ந்தே யழைத்தெம்மை யுபசரித்து
இன்பமார் மொழிகள்கூறி யெம்முடன் வாழ்ந்தாய்நாளும்
மன்பதை தன்னின்மிக்க மாமணி யனையாய்நீயும்
தென்புலம் சேர்ந்தாயெம்மைச் சேர்ந்தவெம் துயர்தீராதே.

## அலுவலகத்தார் அரற்றல்.

ஐயனே எங்கள் அருமைத் திருமகனே
மெய்யாகத் தந்தையினும் தயைகூர்ந்த தானவநின்
துய்யதிரு முகமும் தூய்மைபெறும் இன்மொழியும்
எய்யாது நாமுமினி எப்போது காண்போமோ.

## தேற்றம்.

### வெண்பா.

சித்தங் கலங்கிநிதம் திகைத்து அழுதாலும்
செத்தார் வருவாரோ செகதலத்தீர்—நித்தம்
அன்புடனே நாடோறும் அமலனடி பணிந்தால்
இன்பம் பெருகுமே யினிது.

### விருத்தம்.

மேதினிவாழ்வு நீரிற்குமிழி நிகர்க்கு மென்றே
மேதகையோர் சொலுமுண்மையை யுன்னி விளங்குசிவ
நாதன்பதங் களருச்சிப்ப னென்று நயந்ததருத்
தாதலர்கொய்ய வேகினையோ இராசேந்திரமெனும் தனிமணியே.

மாப்பாணமுதலியார்

சண்முகம்

சின்னத்தம்பி X

இரத்தினம் X கந்தையா

இராசா X கமலம்

இராசேந்திரம் X செல்லம்மா

மதியாப X தங்கச்சி

இராசலக்ஷ்மி X ஸ்ரீ இராமநாதன்

மகாலக்ஷ்மி X சற்குருநாதன்

ஜெயலக்ஷ்மி X சத்தியேந்திரா

விஜயலக X குமாரச

முதலியார் — மூத்ததம்பி

கம் — வீரவாகு

தம்பி X இராசம்மா

| | | | |
|---|---|---|---|
| சேந்திரம் | மதியாபரணம் | இந்திராணி | ஈஸ்வரி |
| X | X | X | X |
| ல்லம்மா | தங்கச்சி அம்மா | இராசவாசல்முதலியார் தியாகராசா | குணம் ஜெறுமையா |

| | | | |
|---|---|---|---|
| யலக்ஷ்மி | விஜயலக்ஷ்மி | மகாராசா | இராசமகேந்திரன் |
| X | X | X | |
| யேந்திரா | குமாரசாமி | பத்மா | |

கொழும்பு பிறிண்டிங் வேர்க்ஸ்,
கொழும்பு-11.